செய்தி வெளியீடு எண்: 195 நாள்: 04.03.2019

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (4.3.2019) சென்னை, சாந்தோமில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் அம்மா உணவகங்களில் விலையில்லா உணவு வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்து கட்டுமானத் தொழிலாளர்களுக்கு உணவுகளை பரிமாறினார்கள்.

தொழிலாளர்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, சென்னையில் பணிபுரியும் பதிவு பெற்ற கட்டடத் தொழிலாளர்களுக்கு அம்மா உணவகங்களில் விலையில்லா உணவு வழங்கும் திட்டத்தை விரைவில் துவக்கும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 8.1.2019 அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 43,631 கட்டுமானத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும் 400 அம்மா உணவகங்களில் (அரசு மருத்துவமனைகளில் உள்ள அம்மா உணவகங்கள் நீங்கலாக) விலையில்லா உணவு வழங்கும் திட்டத்தை சென்னை, சாந்தோமில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு உணவுகளை வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு டி.ஜெயக்குமார், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.இரா. காமராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபில், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன்,

இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு.சுனீல் பாலீவால், இ.ஆ.ப., தொழிலாளர் ஆணையர் முனைவர் டாக்டர் இரா. நந்தகோபால், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.கோ. பிரகாஷ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**